★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
சுபமுகூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
றெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5: பிரமோதூத ஹூ சித்திரை மீ 5 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 21 (18-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 63

### றிசேர்வ் பொலீஸ் பதவி:

# பத்தாயிரம் பேரையும் உடன்திரட்ட ஏற்பாடு

## "உள்ளே வாருங்கள்" நேர்முகப் பரீட்சை விண்ணப்பிக்காதோரும் சமுகமளிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

தேவை! வடக்கு-கிழக்கு மாகாணத்தில் றிசேர்வ் பொலீஸ் உத்தியோகத்தர்களாகப் பணி புரிவதற்குப் பத்தாயிரம் ஆட்கள் தேவை!!

அதன் பொருட்டு, குறைந்த பட்சக் கல்வி மற்றும் உடல் தகுதிகள் உடைய எவரும், நாளை ஆரம்பமாகும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கலாம். முன்னர் விண்ணப்பித்து, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

இது ஒரு "உள்ளே வாருங்கள்" (Walk-in-Interview) நேர்முகப் பரீட்சை முறையில் அமைந்திருக்கும்.

வடக்கு-கிழக்கில் பத்தாயிரம் பேர்களை றிசேர்வ் பொலீஸ் உத்தியோகத்தர்களாக உடனடியாக நியமிப்பதற்காகவே இந்த ஏற்பாடு.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எட்டு மாகாணங்களில் இருந்தும் நாலாயிரம் பேர்களே இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கிடைத்த விண்ணப்பங்களில் தகுதி அடிப்படையிலேயே நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டனர்.

ஆனால்--

ஆளணி மட்ட எண்ணிக்கை (Cadre) முழுவதையும் உடனடியாக நிரப்புமாறு மேலிட உத்தரவு வந்ததைத் தொடர்ந்து றிசேர்வ் பொலீஸ் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், விண்ணப்பமே அனுப்பப்படாத குறைந்தபட்சத் தகுதியுடையவர்களும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றச் சந்தர்ப்பம் அளிக்கப்பட உள்ளது.

பொலீஸ் வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்களின் படி—

கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களில் யாழ்ப்பாணத்திலிருந்து 450 பேரும், வவுனியாவிலிருந்து 350 பேரும், அம்பாறையிலிருந்து 600 பேரும், மட்டக்களப்பி

(5ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



யாழ் தேவி ஒழுங்கா ஓடுற தாலை அவையளுக்கு வருமானம் எக்கச்சக்கம் எண்டு சொல்லுங்கோ......!

## ★ அன்னை பூபதி நினைவாக

# நாளை நல்லூரில் எழுச்சிக் கூட்டம்!

## புலிகளின் முக்கியஸ்தர்கள் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம் ஏப் 18

உண்ணா நோன்பிருந்து உயிர்த் தியாகம் செய்த அன்னை பூபதி நினைவாக நாளை மாலை நான்கு மணிக்கு நல்லூரில் மாபெரும் எழுச்சிக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

இந்தக் கூட்டத்தை விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பங்குபற்றுவர் என நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றும் பிரமுகர்கள்பற்றிய விவரம் இன்று வெளியிடப்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி உண்ணா நோன்பை ஆரம்பித்த அன்னை பூபதி, ஏப்ரல் 19ஆம் திகதி தமது இன்னுயிரைத் தியாகம் செய்தார். அவர் தமது உயிரைத் தியாகம் செய்த தினமான ஏப்ரல் 19ஆம் திகதியே எழுச்சி நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது. (உ-9)

## ரயில்வேக்கு 2 மாதங்களில் 5 கோடி ரூபா!

கொழும்பு, ஏப் 18

இவ்வாண்டு முதல் இரண்டு மாதங்களில் இலங்கை ரயில்வேக்கு 5 கோடி ரூபா வருமானமாகக் கிடைத்தது.

அடுத்த இரண்டு மாதங்களில் இவ் வருமானம் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பாரிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பழுப்பு நிறசீனி விற்கத் தடை

கொழும்பு, ஏப் 18

தனியார் வர்த்தகர்கள் சிலர் இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் பழுப்பு நிற சீனியை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## சாவகச்சேரி வங்கிகளில் பணப்புழக்கம்

பச்சிலைப்பள்ளி, ஏப் 18

சாவகச்சேரியில் மக்கள் வங்கி, இலங்கை வங்கிக் கிளைகளில் நேற்று முன்தினம் முதல் பணக்கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த இரண்டு மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த பணக் கொடுக்கல் வாங்கல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதையிட்டு வர்த்தகர்களும், வாடிக்கையாளர்களும் மகிழ்ச்சி தெரிவித்தனர் (ஒ-117)

## வல்வை, பருத்தித்துறை பொலீஸ் நிலையங்களை திறக்கும் வேலை ஆரம்பம்

பருத்தித்துறை, ஏப் 18

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையங்களை மீண்டும் திறக்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

நேற்று முன்தினம் இந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்த யாழ். பொலீஸ் அத்தியட்சகர் திரு. ஜெயராஜா, பொலீஸ் புதிய நிலையங்கள் அமைய உள்ள இடங்களைப் பார்வையிட்டதுடன் அவ்விடங்களைத் திருத்தி அமைப்பதற்கான வேலைகளுக்கும் உத்தரவிட்டார்.

இதேவேளை பருத்தித்துறைக்கு பொலீஸ் பொறுப்பதிகாரியாக திரு. குணேஸ்வரனும், வல்வெட்டித்துறைக்குப் பொறுப்பதிகாரியாக திரு. செல்லத்துரையும் நியமிக்கப்பட்டுள்ளனர்

அத்துடன் தமிழ் பேசும் பொலீஸார் தலா 40 பேர் இரண்டு பொலீஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட உள்ளனர். [ஒ9]

## தமிழ் பகுதி கூட்டுறவு கடைகளை புனரமைக்க ரூ 8 கோடி உதவி

யாழ்ப்பாணம், ஏப் 18

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி எட்டுக் கோடி ரூபாவை வழங்கவிருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதம்பிள்ளை இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த உதவி மூலம் வாகனங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் போன்றவைகளைக் கொள்வனவு செய்வதுடன் கட்டடங்களையும் புனரமைப்புச் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே 60 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும், மிகுதி இரு வருடங்களுக்குள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-3)

### சம்பள சபைகளுக்கு உட்பட்ட

## தனியார் துறை ஊழியருக்கு ரூபா 200 சம்பள உயர்வு!

கொழும்பு, ஏப்ரல் 18

சம்பள சபைகளுக்கு உட்பட்ட தனியார்துறை ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை மேமாதம் முதல் இருநூறு ரூபாவால் அதிகரிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இது பற்றிய அறிவித்தல் அரச வர்த்தமானியில் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தோட்டத்துறை தவிர்ந்த தனியார் துறைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு என 36 சம்பள சபைகள் உள்ளன.

அடிப்படை சம்பள உயர்வினால் இந்த சபைகளின் கீழ் பணிபுரியும் 38 லட்சம் ஊழியர்கள் நன்மை அடைவர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-1]

## மாகாண கல்வி அமைச்சும் அதிபர்களை தெரிவு செய்யும்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகள் மத்திய அரசாங்கத்தினால் நிரப்பப்படாதவிடத்து அந்த வெற்றிடங்களை மாகாண சபையின் கல்வி அமைச்சு பரீட்சைகளை நடத்தி, தகுதி அடிப்படையில் உரியவர்களைத் தெரிவு செய்து நிரப்பும்

இந்தத் தகவலை தம்மைச் சந்தித்த வடமாகாண அதிபர்கள் சங்கத் தூதுக்குழுவிடம் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ.ஜே சற்குணராஜா தெரிவித்ததாகத் தெரிய வருகிறது

சங்கத்தின் தலைவர் திரு. பி கே. இராசரத்தினம் தலைமையிலான தூதுக்குழுவே செயலாளரை அண்மையில் சந்தித்துப் பேசியது. (உ-72)

# இம்மாத இறுதியில் பிரேமா யாழ் வருவார்?

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவரது வடபகுதி விஜயம் சம்பந்தமான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திரு. பிரேமதாஸா வடக்கில் ஏதேனும் ஒரு அபிவிருத்தித் திட்டத்தைப் பார்வையிட வருகிறார், என்று அவரது விஜயம் தொடர்பாக அறிவிக்கப்படும் என்றும் --

எனினும் தமது விஜயத்தின் போது அவர் விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்களையும் யாழ்ப்பாணத்தில் வைத்து சந்திப்பார் என்றும்-

அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

**சுப நேரம்**

புதன்கிழமை சித்திரை 5
18-04-1990

சுபநேரம்:
04-33முதல் 06-03 வரை
இராகுகாலம்
12-03 முதல் 01-33 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## யாழ். நகரில் நேற்றிரவு பஸ் சேவைகள் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ்ப்பாணத்தில் நேற்று முதல் வட பிராந்திய போக்குவரத்துச் சபை தனது பஸ் சேவைகளை இரவு 10-30 மணி வரை விஸ்தரித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை அடுத்தே இந்த விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்றிரவு 8-30 மணியளவில் கடைகள் சிலவும் திறந்திருக்கக் காணப்பட்டன.

எனினும் மினி பஸ்கள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை. [ஒ-9]

## பகவான் சாயி பாபாவை ஜே. ஆர். தரிசிப்பார்!

கொழும்பு, ஏப். 18

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இன்று தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு பெங்களூர் புறப்படுகின்றார்.

பெங்களூரில் ஒருவாரகாலம் தங்கியிருக்கும் திரு. ஜெயவர்த்தனா அவ்வேளை அங்கு பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவையும் தரிசிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

### அரசமைப்பின் 6 ஆவது திருத்தம் குறித்து

# அரசாங்கம் மௌனம் சாதிப்பது இராணுவப் புரட்சிக்கு அஞ்சியாம்!

## இஸ்ஸதீன் கருத்து

கொழும்பு, ஏப். 18

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதோடு அரசமைப்பின் 13ஆவதுதிருத்தத்திலும் பாரிய மாற்றம் கொண்டுவரவேண்டும் என விடுதலைப் புலிகள் கோரிவருகின்றனர். ஆனால் இதுகுறித்து இலங்கை அரசு தொடர்ந்து மௌனம் சாதித்துவருகிறது.

இதற்குக் காரணம் இதனால் இலங்கையில் ஏற்படக்கூடிய இராணுவப் புரட்சி பற்றி அரசு கவலைப்படுவதே யாகும்,

—இவ்வாறு கூறினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் ஜனாப் சேகு இஸ்ஸதீன்.

கொழும்பில் நேற்று உதயன்செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் அரசு தொடர்ந்தும் தற்போதுள்ள மாகாணசபையை நடத்துவதையே விரும்புகிறது.

இதற்குக் காரணம் –

விடுதலைப்புலிகள்அமைப்பு எதிர்காலத்தில் இலங்கை அரசுக்குப் பிரச்சினையாக அமையுமாயின் அப்பிரச்சினையை இன்னொரு தமிழ்த் தீவிரவாதக் குழுவைக் கொண்டு விலக்க வாய்ப்பாகவே ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ், ரெலோ ஆகிய குழுக்களுடன்

( 5ஆம் பக்கம் பார்க்க)

**நோன்பு திறக்கும் நேரம்**

18-04-1990
ஸஹர் முடிவு 4-28
நோன்பு திறக்கும்
நேரம் 6-19

## சட்டவிரோத மின் பாவனை; கோப்பாயில் திடீர் சோதனை!

கோப்பாய், ஏப்ரல் 18

கோப்பாய்ப் பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு சட்டவிரோத மின் பாவனையாளர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் திடீர் சோதனைகள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளின் உதவியுடன் மின்சார சபை ஊழியர்கள் இந்தத் திடீர் சோதனையை நடத்தினர்.

சுமார் 50 வீடுகளுக்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்பட்டது அப்போது கண்டுபிடிக்கப்பட்டது

## கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பொலீஸ் பாய்ச்சல்

### சூதாடிய 98 பேர் கைது

கொழும்பு, ஏப்ரல் 18

கொழும்பு காலிமுகத்திடலுக்கு அருகில் உள்ள பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் திடீர்வேட்டை நடத்திய பொலீஸார் அங்கு சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகக் கருதப்படும் 98பேரைக் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

''லைசன்ஸ்'' இல்லாமல் 'காஸினோ' (சூதாட்டம்) நடத்தி வந்ததாகக் கூறப்படும் வெளிநாட்டுக்காரர் ஒருவரை பொலீஸார் தற்போது தேடி வருவதாகக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐந்து பெண்களைத் தவிர ஏனையோர் பின்னர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மினி பஸ்களை தரிக்க அனுமதி கேட்டு கோரிக்கை

மினிபஸ்களை, யாழ் சிங்கள மகா வித்தியாலயம் அமைந்திருந்த இடத்தில் அல்லாமல் கோட்டை முனியப்பர் கோவிலடியில் நிறுத்த அனுமதி வழங்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை வட பிராந்திய மினி பஸ் போக்கு

[5 ஆம் பக்கம் பார்க்க]

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சவூதியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஜெனரேட்டர்கள் டீசல் என்ஜின்கள் வேறு பல பொருட்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு யூனிவேர்சல் சேவிஸர், 15, ஆடியபாத வீதி, கல்வியங்காடு. (சந்தியில் இருந்து 100 யார் தூரம்) (3307)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும் விற்கப்படும். Senathirajah, Second Hand Book House, 13/6, ஸ்ரான்லி றோட், (முரசொலி இலங்கை வங்கிக்கு முன் பட்டப் படிப்புக் கல்லூரி லேன்) யாழ்ப்பாணம். (3274)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியியலாளன்செப்/டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர்(புத்தகசாலை)இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### கோழிக்குஞ்சுவிநியோகம்

Hyline வெள்ளை, சிவப்பு, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு(புள்ளித்) சேவற் குஞ்சுகள் 17-4-90 (செவ்வாய்க்கிழமை) யும் Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 18 - 4 -90 புதன்கிழமையும்விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (3267)

### தேவை

N. K. சின்னத்துரை கடைக்கு விற்பனையாளராக கடமையாற்றக்கூடிய G.C.E. (O/L) படித்த ஆண் பெண் இருபாலாரும் உடன் நேரில் வரவும். 2.40 (470) ஆஸ்பத்திரி வீதி, (O.P.D.க்கு முன்பாக). (3276)

### உடன் தேவை

அச்சுக் கோர்ப்பாளர்கள் (கொம்பஸிட்டர்கள்), புத்தகம் கட்டுபவர்கள் (பைண்டர்கள்),இயந்திர இயக்குனர்கள் (பிளேட்டின் - சிலிண்டர் மெசுின் மைண்டர்கள்)உடன் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் திறமைக்கும், அனுபவத்திற்கும் அதியுயர் வேதனம்வழங்கப்படும் பயிற்சி பெற இருபாலர்களும் விண்ணப்பிக்கலாம் பயிற்சிக் காலத்தில் பயிலுனர் படி உண்டு. செட்டியார் அச்சகம், 30, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/4285)

### விபரம் தேவை

C. 90, 87 Sri 3580 இலக்க மோட்டார் சைக்கிளின் தற்போதைய உரிமையாளர் குட்டி இராமதாஸ் அல்லது இராமச்சந்திரன் என்பவருடைய விபரங்கள் தேவைப்படுவதால் தயவு செய்து தொடர்புகொள்ளவும். முகாமையாளர் K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு. [12926]

### மணமகன் தேவை

எட்டில் செவ்வாய்க் குற்றமுள்ள இந்து வேளாள குலப் பட்டதாரிப் பெண்ணுக்கு மணமகன் தேவை. வயது 25 சீதனம் பேசித் தீர்க்கலாம் தொடர்பு இல. 676 C/o உதயன். (3272)

### வாடகைக்கு

சிங்கப்பூர் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய தலை நகை சோடனை செட், எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம், தொடர்பு: ராசி சில்க்ஸ் 70, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். (சி/4129)

### Spoken English

Practice Makes Perfect Series 1–7ஆங்கிலம் வாசித்து விளங்கப் பேசஎழுதஉதவும் கைநூல்கள் தயாரிப்பு S. B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (12319)

### தவறிவிட்டது

15-4-1990 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறையை நோக்கிச் சென்ற மினிபஸ்ஸில் பேர்சுடன் (Purse) பணமும், தோடும், தவறிவிட்டன. கண்டெடுத்தோர் கீழ் வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். துர்க்கா மில், ஸ்ரேசன் றோட், தெல்லிப்பளை. (3275)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/4206]

### Saai Raam

பாவித்த T.V., மணிக்கூடு, கட்டில், மேசை, மற்றும் பல சரக்கு கடைச் சாமான்கள் விறாக்கி, பெட்டகம் உடன் விற்பனைக்கு உண்டு. Saai Raam,3 ஆம் கட்டை, பருத்தித்துறைவீதி கல்வியன் காடு. (12331)

## Toefl Classes

Those who wish to follow TOEFL classes are requested to register their names at this Institute before 30-04-1990. Classes will be conducted during week ends since Sunday, 13th May 1990 by Dr. Porter.

– Director

Evelyn Rutnam Institute
University Lane,
Thirunelveli, Jaffna.
[12323]

## French! French! French!

பிரெஞ்சு மொழி வகுப்புகள்

For Beginners and Others

New Term Commences on
21 - 04 - 1990 Saturday 9.00 a.m

Information and Registration

## Alliance Francaise de Jaffna

(யாழ். பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்)
130, 1st Cross Street, Jaffna.
[சி-4289]

அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலிகள்
உரித்தாகுக.

சென் . மேரிஸ் ஸ்ரோர்ஸ்,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.
(3315)

## கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

ஆரம்பம்: 21 April 1990 11.00 a.m

**DBASE III +**
ஆரம்பம்: 22 April 1990 11.00 a.m

**LOTUS 1-2-3**
ஆரம்பம்: 22 April 1990 9.00 a.m

**WORD PROCESSING**
ஆரம்பம்: 22 April 1990 2.00 p.m

VERBATIM (2S, 2D) Floppy Discs
எம்மிடம் விற்பனைக்குண்டு.




UNIKCO
COMPUTER
CENTRE

No. 5, Power House Road, 2nd Lane,
JAFFNA.
(சி-4293)

## கொம்பியூட்டர் கல்வி

1. BASIC LANGUAGE
மிகவும் பிரபலமான இலகுவில் பயிலக் கூடிய கொம்பியூட்டர் மொழி.
4 மாத கால Week-day/ Week - end வகுப்புகள்
2. dBase III +
உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புக்களை எதிர் நோக்குபவர்களுக்கு இந்தப் பயிற்சி மிகவும் பயனளிக்கும்.
2½ மாத கால Week-day / Week - end பயிற்சிகள்
3. LOTUS - 1, 2, 3
கணக்கியல் துறைக்கு மிக உபயோகமான பயிற்சி
2 மாத கால Week - day Week - end பயிற்சிகள்.
4 WORD PROCESSING
கல்வி, வேலை நோக்கோடு வெளிநாடு செல்பவர்களுக்கு இந்தப் பயிற்சி மிக உகந்தது.
2 மாத கால Week - day / Week– end பயிற்சிகள்

★ LECTURES BY MEMBERS OF INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT( London)
★ PRACTICALS ON I. B. M (COMPATIBLES)
★ MORE HOURS OF PRACTICALS
★ தமிழிலும் விளக்கங்கள்
★ கட்டணத்தைப் பகுதி பகுதியாகச் செலுத்தலாம்
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

புதிய வகுப்புகள்: 23- 04- 1990 முதல்
ஆரம்பம்

## School of Business Administration

(Leaders in Computer Education)
16, 3-ஆம் குறுக்கு வீதி,
[OLR தேவாலய மேற்குப் பக்கம்]
யாழ்ப்பாணம்-
(சி/4294)

## மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் கீழ்க்கண்டவாறு மீளளிக்கப்படும்.

### யாழ். மாவட்டக் கிளைகள்:-

வழங்கும் திகதி: 20—04—1990 வெள்ளிக்கிழமை
வழங்கும் இடம்: யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம்
(யாழ். கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது)

| | | |
|---|---|---|
| 1. | யாழ். பிரதான வீதிக் கிளை<br>புங்குடுதீவுக் கிளை | 12-10-1989 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 2. | யாழ். நவீன சந்தைக் கிளை | 10-10-1989 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 3. | சாவகச்சேரிக் கிளை<br>பளைக் கிளை | 15-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 4. | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை | 15-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 5. | யாழ். கன்னாதிட்டிக் கிளை<br>சங்கானைக் கிளை | 12-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 6. | சுன்னாகம் கிளை | 11-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 7. | காங்கேசன்துறைக் கிளை | 12-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 8. | வல்வெட்டித்துறைக் கிளை | 18-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 9. | ஊர்காவற்றுறைக் கிளை | 25-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 10. | பருத்தித்துறைக் கிளை<br>நெல்லியடிக் கிளை | 19-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |

### 2. கிளிநொச்சி மாவட்டம்.

வழங்கும் இடம்: கிளிநொச்சி தபாற் காரியாலயம்

| | | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|---|
| 1. | பரந்தன் கிளை | (28-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 20-04-90 | வெள்ளி |
| 2. | கிளிநொச்சிக் கிளை | (26-06-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 24-04-90 | செவ்வாய் |

### முல்லைத்தீவு மாவட்டம்

**முல்லைத்தீவு கிளை:**
இக்கிளையில் அடகு வைத்த நகைகளை மீளப் பெறுவதற்காக 21-09-1989 திகதிவரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவு ஜெசி தியேட்டரில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் விசேட கரும பீடத்தினூடாக மீளளிக்கப்படுகின்றது.

**மாங்குளம் கிளை:**
இக்கிளையில் அடகு வைத்து மீளப்பெறுவதற்காக 22-10-1989 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 18ஆந் திகதி முதல் (புதன் கிழமை) மாங்குளம் மக்கள் வங்கியில் வைத்து மீளளிக்கப்படும்.

### வவுனியா மாவட்டம்

**வவுனியாக் கிளை:**
இக்கிளைக்குரிய 1ஆம் கட்ட நகைகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து இம்மாதம் 18ஆந் திகதி முதல் மீளளிக்கப்படும்.

### மன்னார் மாவட்டம்

**மன்னார் கிளை:**
இக் கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 21-09-1989 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம் மாதம் 20ஆந் திகதி முதல் மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்.

**முருங்கன் கிளை:**
இக்கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 21-09-1989 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 25ஆந் திகதி முதல் (புதன் கிழமை) மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்.

● மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

- பிராந்திய முகாமையாளர்

[4455]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு

**பொருள்:**

காற்று இடையறுத்துச் செல்லாதபடி தழுவும் தழுவுதல் ஒருவரை ஒருவர் விரும்பிய காதலர் இருவருக்கும் இனிமை உடையதாகும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
18 - 04 - 1990 த. பெ இலக்கம் 25

## பரந்தன் தொழிற்சாலை

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மீண்டும் இயங்கத் தொடங்கும் என்ற நம்பிக்கை உண்டாகி இருக்கிறது. அடுத்த மாதத்தில் அதனை இயங்கச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் ஆகக் கடைசியாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பெறுபேறு இது. அதனால் காரியம் இம்முறை கைகூடும் என்ற நம்பிக்கை சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் பிறந்திருக்கிறது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1985 ஆம் ஆண்டு முதல் ஐந்து வருடங்களாக முடிக்கிடக்கின்றது. அதனை மீண்டும் இயங்க வைக்குமாறு அறுபது மாதங்களாகத் தமிழர் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் இதுவரை பலன் தரவில்லை. இப்போதுதான் நம்பிக்கை ஒளி பரவியுள்ளது. தொழிற்சாலை மீண்டும் இயங்கும் என்பதால் மனமகிழ்ச்சி பெறும் பல தரப்பினர்களில் உதயனும் ஒருவன்.

''உடனே திறக்குக'' என்று சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்னரும் (10-4-1988 இல்) ''பரந்தன் தொழிற்சாலைக்கு ஏன் இந்தப் பாடு?'' என்று 21-07-1988 இலும், ''பரந்தன் ஒரு சவால்'' என்று 31-07-1989 ஆம் திகதியும் உதயன் இப்பத்தியில் குரல் எழுப்பியிருந்தான்.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி, பரந்தன் தொழிற்சாலை மூடப்பட்டது. ஆயினும் 1981, 1982 ஆம் ஆண்டுகளிலேயே பரந்தன் தொழுற்சாலைக்கு மூடுவிழா நடத்தி, அதனைத் தெற்கே நகர்த்துவதற்கு உட்சதி நடைபெற்று வந்தது. தெற்கில் புதிதாக ஒன்றை நிறுவும் சூழ்ச்சி, பரந்தன் தொழிற்சாலை மூடப்பட்ட பின்னரும் தொடர்ந்தது. இந்தச் சூழ்ச்சிக்கு உடந்தையாகும் விதத்தில் உலக வங்கியும் திசை திருப்பப்பட்டது. அதாவது பரந்தன் தொழிற்சாலையைப் புனரமைப்புச் செய்து லாபகரமாக இயங்கச் செய்யலாம் என்று முதலில் உலக வங்கி கூறியது. ஆனால் பின்னர் அது வீண் முதலீடாகும் என்றும் தெற்கில் புதிய தொழிற்சாலையை நிர்மாணிப்பதே நல்லது என்றும் கட்சி மாறியது; கருத்தை மாற்றியது.

அதே பாணியில் — மிகச் சமீபத்தில் 1990 ஜனவரியில் பரந்தனுக்கு விஜயம் செய்த இரசாயனக் கூட்டுத்தாபனத் தலைவர், தொழிற்சாலையை மிக விரைவில் மீள இயக்குவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறையில் உல்லாசப் பொழுதுபோக்கும் கைத்தொழில் அமைச்சு அதிகாரிகள், அதனை மறுத்து அறிக்கை வெளியிட்டார்கள். வடக்கு - கிழக்கு மாகாணசபையின் அபிப்பிராய அறிக்கை எதிர்பார்க்கப்பட்டிருப்பதாகத் தடைக்கல் போட்டார்கள்.

கைத்தொழில் துறை மாகாணசபை நிர்வாகத்திற்குக் கைமாற்றப்பட்டு விட்டதால், மத்திய அரசு தன்னிச்சையாக எதுவும் செய்யமுடியாது என்று கொழும்பு அரசு சார்பில் வாதாடப்பட்டதும் உண்டு.

இத்தனை சதிகள், சூழ்ச்சிகள், உள்நோக்கங்களைத் தடை தாண்டி பரந்தன் தொழிற்சாலை மீண்டும் இயங்க இருப்பதை வடக்கு-கிழக்கின் பொருளாதார மீட்சிக்கான ஆரம்ப அறிகுறியாகக் கொள்ளலாம்.

பரந்தன் தொழிற்சாலையை புனரமைத்து, புதிய இயந்திரங்களைப் பொருத்தி, நவீனமயப்படுத்தி அதனை லாபகரமாக இயக்கி நடத்தத் தூண்டுவது மாகாண சபை எதிர்நோக்கும் பெரும் சவாலாகும்.

தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி அவற்றை வளம் கொழிக்கும் பிரதேசங்களாக்கி, மக்களுக்கு வாழ்வு கொடுக்கக் கூடிய திறமையும், தகுதியும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும், புத்திஜீவிகளுக்கும், நிபுணர்களுக்கும் இருக்கிறதா என்பதற்கு பரந்தன் தொழிற்சாலை ஓர் ஆரம்ப சோதனைக் (Acid Test) களம் எனக் கொள்ள வேண்டும்.

வடக்கு-கிழக்கின் பொருளாதார சுபீட்சத்தில், வளர்ச்சியில், முன்னேற்றத்தில், மேம்பாட்டில் அக்கறை உடைய சகலரினதும் கூட்டு முயற்சியும், திறமையும், உழைப்பும், இங்கு ஒன்று சேர்வது அவசியம். அந்த ஒற்றுமை செயல் உருவம் பெறுமா என்பதைத் தமிழ் மக்கள் மிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

## தம்பலகாமம் ப. நோ. கூ. ச. 4 வருடத்துக்குபின் இயங்குகிறது

1985 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக முழுமையான பாதிப்புக்கு உட்பட்டு கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக செயலற்றிருந்த தம்பலகாமம் ப. நோ. கூ. சங்கம் வடக்கு கிழக்கு மாகாண அரசின் கூட்டுறவு ஆணையாளரும் பதிவாளருமான திரு. எஸ். வேலாம்பிள்ளையின் பணிப்பில் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது.

சங்க பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக கல்வி அதிகாரி திரு. கே. திலகரத்தினமும் முன்னாள் மகாவலி திட்ட அமைச்சு உத்தியோத்தர் திரு. எஸ். சண்முகலிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முகாமைப் பணிப்பாளராக தலைமைப் பணியக கூட்டுறவுப் பரிசோதகர் திரு. சி. கோணேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சங்கம் செயற்பட ஆரம்பித்த மூன்று மாத காலத்தில் இதன் 15 கிளைகளில் 13 மீண்டும் தொழிற்படத் தொடங்கியுள்ளன.

சேதமுற்றிருந்த சங்க தலைமையகக் கட்டடம் மீள் புனரமைப்பு செய்யப்படுகின்றது. இப்புனரமைப்பு பூரணமாகும் வரை தலைமையகப் பணிகள் தம்பலகாமம் வர்ணமேட்டில் உள்ள சங்க நெற் களஞ்சியப் பிரிவில் மேற் கொள்ளப்பட்டுவரும் தொழிலற்று இருக்கும் சங்க பணியாளர் பலருக்கு மீண்டும் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. (இ-ப)

## நெடுந்தீவில் சிற்றூரவை

நெடுந்தீவு ஏப் 18

விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவினால் நெடுந்தீவுப் பகுதியில் சிற்றூரவை அமைக்கப்பட்டு வருகிறது. (இ111)

## கால்நடை நோய் தடுப்பூசி

கொழும்புத்துறை ஏப் 18

கொழும்புத்துறை கிழக்குக் கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம், கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் முயற்சியால் கடந்த வியாழக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் கால்நடைகளுக்கு கோமாரித் தடுப்புமருந்து ஏற்றப்பட்டது. (இ-30)

## சமய சந்நிதிகளில்

### உற்சவம்

சாவகச்சேரி ஏப் 18

நுணாவில் மேற்கு கொல்வங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற தேர் தீர்த்த உற்சவங்களுடன் நிறைவுற்றது. (இ-31)

### தேர்க்கொட்டகை

கோப்பாய் ஏப் 18

கோப்பாய் வடக்கு பலானை அம்மன் கோவில் தேர்க்கொட்டகைஅமைக்கும் பணி ஐந்து லட்சம் ரூபா செலவில் ஆரம்பமாகியுள்ளது. (க-72)

### அப்பர்சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம் ஏப் 18

அப்பர் சுவாமிகள் குருபூசை 21 ஆம் திகதி சனிக்கிழமை கரம்பன் குரு மடத்தில் நடைபெறவுள்ளது.

திருமுறைப்பாராயணம் காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை இடம்பெறும். அத்துடன் மகேஸ்வரபூசைக்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

### குரும்பசிட்டியில் நாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப். 18

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் 21 ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சபை மண்டபத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடத்தப்படவுள்ளது.

வடமாநில சித்திர வித்தியாதிகாரி கலாகேசரி திரு ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் இக்குருபூசையில் ''வாக்கின் நாயகனார்'' என்ற பொருளில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு கனகசபாபதி நாகேஸ்வரன் சிறப்புரை நிகழ்த்துவார்.

அத்துடன் இச்சபையின் சமயப் பணிகளுக்காக முன்னின்றுஉழைத்தகாலம்சென்ற நா. சிவசாமி கலாஞ் சென்ற மு. சுப்பிரமணியம் ஆகியோரது உருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்படும் (க-ப)

## இன்று உண்ணாவிரதம்

சுன்னாகம் ஏப் 18

அன்னை பூபதி நினைவாக விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் சுன்னாகம் பிரதேசப் பொறுப்பாளர், திரு. சிவா தலைமையில், மாசியப் சண்டிலிப்பாய் ராஜன் பாடசாலைக்கு அருகாமையில் நாளை புதன்கிழமையும் உண்ணாவிரதம் நடைபெறும்.

சுன்னாகம் சிவபூதராயர் கோவில் முன்றலிலும் இன்று புதன்கிழமை உண்ணாவிரதத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை உண்ணாவிரதம் நடைபெறும். (க)

### உண்ணாவிரதம்

மானிப்பாய், ஏப்ரல் 18

அன்னை பூபதியின் நினைவாக உடுவில் டச்றோட் மக்களால் நாவலடி வயிரவ கோவில் முன்றலில் உண்ணாவிரதம் நடைபெற்றது.

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்ற இவ்உண்ணாவிரதத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். உண்ணாவிரதத்தை தொடர்ந்து இரவு விடுதலைப் புலிகளின் கலாசார பிரிவினரின் ''நடந்து வந்த பாதையிலே'' என்ற வில்லிசையும் நடைபெற்றது. (இ-90)

## ஆயுர்வேத வைத்தியசாலையில் ஊழியர் பற்றாக்குறை

### அதிகரித்து வரும் நோயாளிகளை சமாளிக்க முடியாத நிலை

கொழும்புத்துறை, ஏப் 18

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் ஊழியர் பற்றாக்குறை நிலவுகிறது. நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

1983 ஆம் ஆண்டில் இந்த வைத்தியசாலையில் 35 சிற்றூழியர்கள் பணியாற்றினர். தற்போது 14 ஊழியர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். முன்பு இங்கு எட்டுத் தாதிகள் கடமையாற்றினர் என்றும் தற்பொழுது ஒரேயொரு தாதி மட்டுமே சேவையாற்றுகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் சகல வசதிகளையும் கொண்ட ஒரே அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை இது ஆகும். இங்கு 150 படுக்கைகளைக் கொண்ட நோயாளர் வார்ட்டுக்கள் உள்ளன.

அண்மைக்காலமாக நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் ஊழியர் பற்றாக்குறையை நீக்கி நோயாளர்களுக்கு சிறந்த சேவையைச் செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-30)

## நாணய மாற்று விகிதம்

16-04-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.39 | 232 35 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002 80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6518 93 | 6549 08 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2379.58 | 2397 12 |
| 100 | பிரெஞ்சு பிராங் | 704 73 | 717.51 |
| 100 | ஜப்பானிய யென் | 25.0244 | 25.2414 |

## மாசியப்பிட்டியில் உண்ணாவிரதம்

சுன்னாகம் ஏப் 18

அன்னை பூபதி நினைவாக மாசியப்பிட்டி சந்திக்கு அருகாமையில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் சுன்னாகப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சிவா தலைமையில் நேற்று உண்ணாவிரதம் நடைபெற்றது.

உண்ணாவிரதத்தில் பெரும் எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். (க)

## ஒத்திவைப்பு

கொக்குவில், ஏப்ரல் 18

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை அகில இலங்கைரீதியில் இம்மாதம் 22 ஆம் திகதி நடத்த இருந்த கட்டுரை பேச்சுப்போட்டி 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். (இ-69)

## குழாய் நீர்

நெடுந்தீவு, ஏப்ரல் 18

நெடுந்தீவில் குழாய் நீர் விநியோகத்தைச் சீராக்கும் நோக்கில் புதிய தொட்டிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (ப-111)

## தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

## புலமைப் பரிசில் வழங்க பழைய மாணவர் சங்கம் உதவி

காங்கேசன்துறை, ஏப் 18

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் கணித பாடத்தில் உயர் சித்திபெறும் மாணவனுக்கு புலமைப் பரிசில் வழங்க கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை வைப்புப் பணம் வழங்கியுள்ளது.

கல்லூரியின் கொழும்புக் கிளையால் சேகரிக்கப்பட்ட 15 ஆயிரத்து 599 ரூபாவை கிளையின் சார்பில் திரு. எஸ். தபேந்திரன் பழைய மாணவர் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் கல்லூரியில் நடைபெற்ற சமயம் இப்பணம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பணம் வங்கியில் வைப்பிடப்பட்டு அதில் கிடைக்கும் வட்டிப்பணத்தில் புலமைப்பரிசில் வழங்கப்பட இருக்கிறது. (இ-68)

## 3 மாவட்டங்களின் தேவைக்கு வன்னி மரக்கூட்டுத்தாபனம்

### விடுதலைப் புலிகள் ஆரம்பித்தனர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மரக் கூட்டுத்தாபனம் ஒன்றை ஆரம்பித்துள்ளது

மாங்குளம் — முல்லைத்தீவு வீதியில் கரிபட்ட முறிப்பு என்னும் இடத்தில் இந்த மரக்கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டுள்ளது.

''வன்னி மரக்கூட்டுத்தாபனம் கரிபட்ட முறிப்பு. தமிழீழம்'' என்ற பெயருடன் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மரம் அரிவதற்கு 25க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இங்கு வேலை செய்கின்றனர்.

இங்கு விற்பனையாகும் பலகை, தீராந்திகள் ஆகியவற்றை மேற்குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களுக்கும் வெளியே எடுத்துச் செல்ல முடியாது என தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாளராக திரு. தண்டேஸ் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-113)

## தென் இந்தியாவில் பயிற்சி:

## பனை அபிவிருத்திச் சபை 50 பெண்களை அனுப்புகிறது

பண்டத்தரிப்பு ஏப் 18

தென் இந்தியாவில் கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் மகளிர் குழுக்களின் பங்களிப்பு செயற்பாடுகள் ஆகியன பற்றி அறியவும் ஆய்வு நடத்தவும் பனை அபிவிருத்திசபை 50 பெண்களை அனுப்புகின்றது.

கிராமிய மகளிர் குழுக்கள் ஏற்பாடு செய்து நடத்தும் தொழிற்சாலைகள், சுயதொழில்கள், நிருவாகம் சுகாதாரம் பேணும் முறைகள், சத்துணவுச் செயற்பாடுகள் இப்படி பல் துறை விஷயங்களை இவர்கள் அறிந்து வருவர்.

இம் மாதம் முதல் வாரத்தில 25 பெண்கள் ஏற்கனவே முதற்கட்டமாக அனுப்பப்பட்டுள்ளனர். அடுத்த 25 பேரும் மாதத்தின் கடைசி வாரத்தில் அனுப்பப்படவுள்ளனர். (இ-120)

## புதிய வீதி

நீர்வேலி பகுதியில் வலி-கிழக்கு பிரதேச சபை ஆணையாளர் திருமதி. தனேஸ்வரி பாஸ்கரனினால் ''பெரிய தம்பி - கந்தபபிள்ளை'' என்னும் வீதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (72)

## பதவி விலகினர்

நெடுந்தீவு ஏப் 18

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கத்தின் தலைவர் உட்பட இயக்குனர் சபை உறுப்பினர் அனைவரும் தமது பதவிகளில் இருந்து விலகிக் கொண்டனர். (இ-111)

## அதிகமாகச் சிரிப்பதின் ஆபத்து

''என் உயிர் எவனது கைவசம் உள்ளதோ அவன் (அல்லாஹ்) மீது ஆணையாக! நான் அறிந்தவற்றை நீங்கள் அறிந்து கொண்டால் அதிகமாக அழுவீர்கள், குறைவாக சிரிப்பீர்கள்'' என நபி (ஸல்) அவர்கள் உபதேசம் செய்தார்கள்.

''மனிதர்கள் சிரிப்பதற்காக வேண்டி, பரிகாச வார்த்தைகளைக் கூறுகிறார்கள். இதன் காரணமாக, வானத்திற்கும் பூமிக்கும் உள்ள தூரத்தில் நரகில் தூக்கி வீசப்படுவார்கள், என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய பின் காலினால் சறுக்கி விழுவதை விட நாவினால் சறுக்கி [illegible] னது என்பதாகக் கூறினார்கள்.




## வாசகர் திருமுகம்

### மினிபஸ் பயணம்

மிதிபலகையில் பயணம் செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள். அத்துடன் பஸ் உரிமையாளர்களுக்கும் தண்டம் விதிக்கப்படும். அண்மையில் இக்கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது வரவேற்கத் தக்கது.

எனினும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளஇச் சட்டத்தால் பயணிகள் பெரிதும் அவஸ்தைப்பட வேண்டியுள்ளது. பஸ் நடத்துனர்கள் முன்பு பயணம் செய்து அவ்வளவு பயணிகளையும் உள்ளேஅழைத்து தாம்முன்பு பெற்ற லாபத்தையே பெறுகின்றனர். மிதிபலகையில் மட்டும் பயணிகள் இல்லை. அவ்வளவு தான்!

இதற்குப்பரிகாரம் - நின்று பயணம் செய்யும் பயணிகளையும் ஒரு குறிப்பிட்ட தொகை என மட்டுப்படுத்தினால் பிரயாணிகள் சிரமமின்றி பயணம் செய்ய முடியும்.

சேரியூர் தீபன்,
சாவகச்சேரி.

### பாலம் திருத்தப்படுமா?

கொக்குவில்பொற்பதிப்பிள்ளையார் கோவிலின் பின்வீதியில்இருந்துகுளங்கரை லேன் ஊடாகச்சென்று கொக்குவில் சந்தியில் மிதக்கும் பாலம் கடந்த காலத்தில் இந்திய இராணுவத்தால் அழிக்கப்பட்டது. இந்தப் பாலத்தைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

ம. குமரன்,
குளங்கரைலேன்,
கொக்குவில்.

### பாஸ்போர்ட் புதுப்பித்தல்

யாழ்ப்பாணத்தில் பாஸ்போர்ட் ஏற்கும் பிரிவு 16ஆம் திகதி தொடக்கம் இயங்க ஆரம்பித்திருப்பது மக்களுக்குக் கிடைத்த புதுவருஷ வரப்பிரசாதமாகும்.

மேலும் பாஸ்போர்ட் விண்ணப்பங்களுக்கான பணத்தை இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரிக் கிளையில்செலுத்திரசீது பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய பாஸ்போர்ட்டைப் புதுப்பிக்கவும் இத்தகைய ஒழுங்கைச் செய்தால் அது மக்களுக்குப் பேருதவியாக அமையும்.

ஆதலால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விஷயத்தைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எஸ். கே. ஐயர்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

## விசேட படகுசேவை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழாவை முன்னிட்டு அரசு மூலம் படகுச்சேவை ஒன்றை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்போவதாக யாழ் அரச அதிபர் யாழ் செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உறுதியளித்தார். [ப]

## கண்டதும் கேட்டதும்

சீனத் தலைநகரான பீக்கிங் முன்னர் ''நைட் லைவ்'' [Night Life] என்று சொல்லப்படும் வாழ்க்கை குறைவாகவே இருந்தது. ஆனால் தியென் அன் மென் சதுக்கத்தில் சீன மாணவர்கள் அடக்கப்பட்ட பின் இரகசியமான ''நைட் லைவ்'' பரவிப் பெருகியுள்ளது.. இதை இன்றைய ஆட்சிக்குக் காட்டப்படும் ஒருஎதிர்ப்பாக அவர்கள் கருதுகின்றார்களாம்.

சட்டவிரோதமான மதுசாலைகள், உடல் பிடித்துவிடும் நிலையங்கள், டிஸ்கோ நடன நிலையங்கள், விபசாரநிலையங்கள், திறந்த வெளி பில்லியாட் நிலையங்கள் ஆகியன ஏராளமாக அங்கு தோன்றியுள்ளன.

பீக்கிங் பிரஜைகள் சிலர் பெரும் எண்ணிக்கையில் பணத்தை றொக் அன்ட் றோல் நடனங்களிலும் சூதாட்டத்திலும் விபசாரத்திலும் வெளிநாட்டு மதுவிலும் செலவழிக்கின்றார்களாம்.

செய்திலோலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள் வாழ்த்து



## ★ பிறேம் அன்ரனிஸ் ★

நெடுந்திவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்த
அருள்தாசன் பிரான்சிஸ்காவின்
அருந்தவ புதல்வன் [பிறேம் அன்ரனிஸ்]

18-4-90 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை குதூகலமாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா யாழ்நகர் ஞானப்பெற்றோர் அம்மம்மா, இந்தியா பெரிய மாமா, மாமி, சுஜோ மச்சாள், சுஜீவ் மச்சான், குட்டி மச்சாள் சுஜா, பிரான்ஸ் சின்னமாமா, பெரியம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, ஆசை மாமி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணன்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் அன்னை வேளாங்கன்னி அருள் பெற்று வாழ வாழ்த்துகிறார்கள்.

(12322)

# விநியோகஸ்தர்கள் தேவை

மலையகத்திலிருந்து தருவிக்கப்பட்ட உயர்ரக தேயிலை, கோப்பி, மிளகு போன்றவற்றிற்கு விநியோகஸ்தர்கள் தேவை. வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் உங்களது வியாபார ஸ்தாபனம் பற்றிய விபரங்களுடன் 05 – 05 – 90 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். மாதிரிகள் (Samples) அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**N. Surendra,**
Manager [(Distribution),
**Seagull International,**
368/1, De Soysa Road,
Molpe, Moratuwa.

[12327]

26 - 01 - 1990 இல் வீமன்காமத்தில் ஷெல்பட்டு
19 – 03 – 1990 இல் அகாலமரணமடைந்த
திரு. ப. பத்மநாதனின்

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்



## திரு. ப. பத்மநாதன்

(யூனியன் கல்லூரி பழைய மாணவனும்.
(B.B.A) பட்டதாரியும். விளையாட்டு வீரனும்,
தற்போது சமூகசேவைகள் உத்தியோகத்தராக,
(S.S.O) துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்
சேவையாற்றியவருமாவார்)

தோற்றம்: 10 – 10 – 1961
மறைவு: 19 –03–1990

அவர் எமது குடும்பத்தில் அன்புக்கு ஒளிவிளக்காயும், அறிவுக்கு கடலாயும், வீரத்திற்கு விஜயனாயும் இருந்துவிட்டு எம்மை ஆற த்துயரத்தில் ஆழ்த்தி விட்டு, மீளாத்துயில் கொள்ளச் சென்றது எங்கே? இல்லத்தில் வைக்க இயலாமல் உள்ளத்தில் வைத்து உருகுகின்றோம்

18 – 04 – 1990 அன்று (புதன்கிழமை) அன்னாரின் அந்தியேட்டி கீரிமலையில் நடைபெற்று, பகல் 10.30 மணியளவில் வீட்டுக்கிருத்தியம் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், நண்பகல் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**தாய், சகோதரர்கள்.**

நெசவுசாலை ஒழுங்கை,
மாவிட்டபுரம் கிழக்கு,
தெல்லிப்பளை.

(12329)

★ நேபாளத்தில் இனிமேல்

# அரசியல் சாசனத்துக்கு உட்பட்டு முடியாட்சி நடத்த மன்னர் இணக்கம்

## புதிய பிரதமர் இன்று பதவி ஏற்பு

காத்தமண்டு ஏப் 17

அரசியல்சாசனத்துக்குக்கட்டுப்பட்ட முடியாட்சியைக் கொண்டுவர நேபாள மன்னர் பிரேந்திரா இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

44 வயது மன்னருடன் பேச்சுக்களை நடத்திய பின்னர் நேபாளத்தேசிய காங்கிரஸ் தலைவர் கணேஷ் மான்சிங் வெளியிட்ட அறிக்கையில் முன்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னரின் அரண்மனையில் ஒரு மணித்தியாலம் நடந்த இப்பேச்சுக்களின் போது மன்னர் அரசியல் சாசனத்துக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்று கணேஷ் மான்சிங் வற்புறுத்தினர். அதற்கு மன்னர் முழு அங்கீகாரமளித்தார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இப்போது மன்னரின் அதிகாரத்துக்கு உட்பட்ட அரசியல் அமைப்பே இருந்து வருகிறது.

இதனிடையில்–

நேபாள தேசியக் காங்கிரஸ் உபதலைவர் திரு. கே. பி. பாத்ரா இன்று (செவ்வாய்) பிரதமராகப் பதவி ஏற்க உள்ளார். வயோதிபம் காரணமாக கணேஷ் மான்சிங் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

90 நாட்களுக்கு இடையில் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படுவதற்கு புதிய பிரதமர் நடவடிக்கை எடுப்பார். (எ)

### காஷ்மீரில் பத்திரிகைகளுக்கு தடை

புதுடில்லி ஏப் 17

காஷ்மீரில் 2 பத்திரிகை அலுவலகங்களைஇந்திய அரசு மூடி சீல்வைத்தது.

மற்றும் பதினொரு பத்திரிகைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று காஷ்மீர் ஆளுநர் ஜக்மோஹன் நேற்று அறிவித்தார். இப்பத்திரிகைகள் தீவிரவாதிகளின் பிரசாரசாதனங்களாக செயற்பட்டு வந்தன என்று ஆளுநர் குற்றஞ்சாட்டினார்.

நேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி சில நிறுவனங்களையும் இந்திய அரசு தடை செய்து விட்டது. (எ)

# பிரதமர் தாட்சரைக் காண நெல்சன் மண்டேலா மறுப்பு!

லண்டன் ஏப் 17

எதிர் வரும் ஜூனில் மீண்டும் லண்டனுக்கு விஜயம் செய்யும் போது பிரதமர் தாட்சரைச் சந்திக்கப் போவதாக ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

தற்போது மேற்கொண்டுள்ள லண்டன் விஜயத்தின் போது பிரதமர் தாட்சரையோ அவரது அரசு அமைச்சர்களையோ சந்தித்துப் பேச்சுக்கள் நடத்த திரு. நெல்சன்மண்டேலா மறுத்து விட்டார்.

இதனிடையில்–

38 ஆண்டு கால இடைவெளியின் பின்னர் முதல் தடவையாக ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா பிரிட்டனுக்கு விஜயம் செய்தார்.

லண்டன் ஹீத்றோ விமான நிலையத்தில் டாக்டர் மண்டேலா செய்தியாளர் மத்தியில் பேசுகையில், இதன் ஆபிரிக்க வெள்ளை நிற அரசு மீதான பொருளாதார நிர்ப்பந்த நடவடிக்கைகளை பிரிட்டன் கடுமையாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் (எ)

### உணவு நஞ்சாகி 80 பேர் மரணம்

லக்னோ, ஏப் 17

உத்தரப்பிரதேசத்தில் உணவு நஞ்சு ஆகியதால் இறந்தோரின் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்தது.

இச்சம்பவம் பற்றி நீதி விசாரணை நடத்த மாநில முதல் அமைச்சர் உத்தரவிட்டார்.

திருமண விருந்தொன்றில் கலந்து கொண்டவர்கள் அதன் பின்னர் வயிற்று வலியால் கஷ்டப்பட்டனர். அதைத் தொடர்ந்தே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன (எ)

### உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கராச்சி, ஏப் 17

இந்திய வம்சாவளி பாகிஸ்தானியர் துன்புறுத்தப்படுவதாகக் குற்றஞ்சாட்டி மொஹஜீர் தேசிய இயக்கத் தலைவர் அல்டாப் ஹுசேன் மேற்கொண்ட 18 மணி நேர உண்ணாவிரதம் நேற்று கைவிடப்பட்டது.

சிந்து மாகாண ஆளுநர் பக்ருதீன் ஏப்ரஹாம் மேற்கொண்ட சமாச முயற்சியின் பயனாக உண்ணாவிரதத்தை ஹுசேன் கைவிட்டார். (எ)

### இராணுவச்சதி

1992 ஆம் ஆண்டுக்கு இடையில் திருமதி அக்யூனோ தலைமையிலான அரசைக் கவிழ்க்க இராணுவச் சதி ஒன்றை மேற்கொள்ளப்போவதாக புரட்சி இராணுவத் தளபதி கிரிகெரி ஹொனாஸோன் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் இவர் மேற்கொண்ட இரண்டு சதி முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

அதனைத் தொடர்ந்து ஜெனரல் ஹொனாசோஸன் தலை மறைவாக இருக்கிறார்.

அமெரிக்கச் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றில், "1992 இல் திருமதி அக்யூனோ புதிய தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும். அதற்கு முன்பதாக இராணுவச் சதி ஒன்றின் மூலம் அவரை நான் கவிழ்த்து விடுவேன்" என்றார். (எ)

# 31வது நாள் கண்ணீர் அஞ்சலி



செல்வன்

## ரவீந்திரநாதன்- ஜெயேந்திரன்

மலர்வு: 16 - 04 - 86
உதிர்வு: 19 - 03 - 90

எம் அன்புச்செல்வமே! உன் உயிரை மீட்க ஊரெல்லாம் கொண்டலைந்தோம், எம் அலைகள் மாறவில்லை. எம்நினைவோ தீரவில்லை. ஆறாத்துயரினிலே எம்மை ஆழ்ந்திருக்கக் கூறாது சென்றவிதம் மாறாது நெஞ்சினிலே.

உன்னைத் தேடும்
அப்பா, மம்மி, அண்ணாமார்,
மற்றும் உறவினர்கள்.

செல்வவாசா
சாவகச்சேரி.

(12909)


குமுலுஸ் D.F. போட்டி

**BASF**
**குமுலுஸ் D.F.**
**பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்**




| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி – | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி – | 5 |
| கைத்தெளி கருவி – | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி – | 20 |
| எவரெடி ரோச் லைற் – | 48 |
| ரீ சேட் – | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பெர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.

வெட்டி அனுப்பவேண்டிய பகுதி




பெயர் ____
முகவரி ____
வியாபாரியின் பெயர் ____
முகவரி ____

Licence No S/731

FINCHEM AGRO DIVISION
**பின்லெ கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்**
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

பீடை நாசினிகள் அபாயகரமானவை. **அவதானமாக பாவிக்கவும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அடைக்கலம் மறுக்கப்பட்ட தமிழ் இளைஞர் திரும்பி வருகிறார்

## 48 மணித்தியாலத்தில் இலங்கைக்கு அனுப்பிவிட ஆஸ்திரேலிய நீதிபதி உத்தரவு

பேர்த், ஏப். 18

அரசியல் அடைக்கலம் மறுக்கப்பட்ட இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார் என்று ஆஸ்திரேலியா குடியகல்வு திணைக்களம் அறிவித்தது.

22 வயதான சுதர்லன் அற்புதராஜா என்ற இந்த இளைஞர் கடந்த டிசம்பர் மாதம் 29ஆம் திகதி முதல் பேர்த் விமான நிலையத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கிறார்.

ஆஸ்திரேலியாவில் அரசியல் அடைக்கலம் கோரும் இந்த இளைஞரின் விண்ணப்பத்துக்கு சர்வதேச மன்னிப்புச் சபையும் ஆதரவளித்தது.

இவரின் விண்ணப்பத்தை ஆஸ்திரேலிய சமஷ்டி நீதிமன்றம் ஒன்று கடந்த வாரம் நிரகாகரித்துவிட்டது.

நீதிமன்றத்தில் திரு. அற்புதராஜாவின் சார்பாக தெரிபட்ட வழக்கறிஞர் பிரயன் ஸ்ரோக்ஸ் சொன்னதாவது;

போராளியாகப் பயிற்றப்படுவதற்கு ஈபி.ஆர்.எல்.எவ் இயக்கம் மனுதாரரை இரண்டு தரம் பிடித்தது.

ஒவ்வொரு முறையும் இவர் தப்பிவிட்டார். தப்ப முயன்ற இவரின் நண்பர்கள் இருவர் சுடப்பட்டனர். அதன் காரணமாக இவர் பயந்து போயிருந்தார். இவர் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டால் விமான நிலையத்தில் வைத்தே தமிழ் புரட்சியாளன் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்படுவார். அல்லது பயிற்சியை விட்டு ஓடியவர் என்று இவர் சுடப்படுவார்.

இலங்கையில் இவர் மறைந்து பயத்துடன் வாழவேண்டும். -- இப்படி அவர் வாதாடினார்.

நீதியரசர் திரு. பிரென்ச் "திரு. அற்புதராஜாவை இலங்கைக்கு ஏன் திருப்பி அனுப்பக் கூடாது என்பதற்கு சட்டபூர்வமான காரணம் எதுவும் இல்லை" - என்று சொன்னார்.

பல வந்த ஆட்சேர்ப்பு முயற்சிக்கு ஆளாகியதாக அற்புதராஜா கூறுவதில் சிறிது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

வருத்தத்துடன் இந்த முடிவுக்கு நான் வருகிறேன்" — இப்படி நீதியரசர் தெரிவித்தார்

கடந்த ஜுலையில் திரு. அற்புதராஜா யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு தப்பி ஓடினார்.

3ஆயிரத்து 420 அமெரிக்க டாலர் கொடுத்து மோசடி கடவுச் சீட்டுஒன்றைப்பெற்று இவர் டிசம்பர் 29இல் பேர்த்துக்குவிமான மூலம் சென்று இறங்கினார் என்றும்

பேர்த் விமானநிலையத்தில் வைத்துஅவரின் பாஸ்போர்ட் மோசடி செய்யப்பட்ட ஒன்று என கண்டுபிடிக்கப்பட்டது என்றும்

அன்று முதல் அவர் பேர்த் தடுப்பு முகாமில் இருந்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மலேசிய நாட்டுவிமானம் ஒன்றில் அற்புதராஜா இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார் என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ)

## வேலைக்குத் திரும்பாத 60 விரிவுரையாளர்கள் மீது வழக்குத் தாக்கலாகும்?

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி மேற்படிப்புக்காக வெளிநாடு சென்று திரும்பாத 60 விரிவுரையாளர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் 60விரிவுரையாளர்கள் தம் மேற்படிப்புக்காக சுமார் மூன்று வருட காலம் வரை லீவு பெற்று வெளிநாடுகளுக்கு சென்றிருந்தனர்.

லீவு எடுக்கும் போது தாம் திரும்பி வருவோம் என்று லட்சக்கனக்கான ரூபா பெறுமதியான பிணைப்பத்திரத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்து விட்டே அவர்கள் சென்றனர். தமது படிப்புக் காலத்தில் அவர்கள் சம்பளமும் பெற்று வந்தனர்.

அவர்களில் அனேகமானோர் தமது லீவு முடிந்தும் இன்னும் கடமைக்குத் திரும்பவில்லை இதனால் அவர்களின் இடத்துக்கு புதிய விரிவுரையாளர்களை நியமிக்கவும் முடியாதிருந்தது.

அவர்கள் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு சென்றிருந்தால் அவர்களின் இடத்துக்கு புதியவர்களை நியமிப்பது இலகுவாக இருந்திருக்கும் என்று பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தகைய விரிவுரையாளர்களின் செயலால் யாழ் பல்கலைக்கழகக்கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகிறது என்று இந்த அதிகாரி சொன்னார்.

தமக்கு வழங்கப்பட்ட லீவு காலத்துக்கு மேல் இவர்கள் அங்கு தங்கியிருப்பதால் அவர்களுக்கு வேலை நீக்கக் கடிதங்களை அனுப்பிய பின் புதிய விரிவுரையாளர்கள் நியமிக்கத்பட்டு வருகின்றார்கள்.

இவர்கள் வேலைக்கு திரும்பாததால் பல்கலைக்கழகத்துக்கு செலுத்த வேண்டிய பிணைப்பணத்தை அவர்களிடமிருந்து பெறுவதற்காக அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வது குறித்து சட்ட ஆலோசனைகளை பல்கலைக்கழக நிர்வாகம் பெற்று வருகிறது. [உ-3]


### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

### 29-வது ஆண்டுப் பொதுக்கூட்டம்

**1990. 05. 21**

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் விவாதிப்பதற்குரிய பிரேரணைகள், தீர்மானங்கள், அமைப்பு விதித் திருத்தங்கள்- பிரேரணைகளும், தலைவர், துணைத்தலைவர், பொதுச்செயலாளர், துணைச்செயலாளர், நிதிச்செயலாளர், துணை நிதிச்செயலாளருடன் ஒன்பது தமிழ் மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கான வேட்பு மனுக்களும் 1990 – 04 – 28 ஆம் திகதிக்கு முன் பொதுச் செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும்.

செ. பரராஜசிங்கம்,
பொதுச்செயலாளர்.

104, ஜும்மா மொஸ்க் லேன்,
யாழ்ப்பாணம்.
10. 04. 1990 (12330)


### ஊவா பரனகமவில் வங்கி கொள்ளை!

கொழும்பு, ஏப் 18

மக்கள் வங்கியின் ஊவா பரனகம கிளையை ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று கடந்த வியாழன் சாலை கொள்ளை அடித்தது.

புதிய கணக்கு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு கொள்ளையர் வங்கிக்குள் நுழைந்தனராம்.

பின்னர் வங்கியின் பாதுகாப்பு அதிகாரியை அக்கோஷடியினர் சுட்டுக் கொன்றனர். பின்னர் வங்கியில் இருந்து 9 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டனர். (உ-எ)


## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருஷம் சித்திரை மாதம் 9 ஆம் நாள் (22- 4- 1990) ஞாயிறு பிற்பகல் 12. 30 மணி முதல் 1. 30 மணி வரையும் உள்ள சிங்கலக்கினமும் உத்திரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுப முகூர்த்தத்தில்

| எங்கள் ஏக புத்திரன்<br>திருநிறைச் செல்வன்<br>**உருத்திரலிங்கம்**<br>அவர்கட்கும் | எங்கள் கனிஷ்ட புதல்வி<br>திருநிறைச் செல்வி<br>**பவதாரணி**<br>அவர்கட்கும் |
|---|---|

மொன்றியல் 3330 Laurier Ave - East இல் அமைந்துள்ள மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யத் திருவருள் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை அன்புடன் ஆசீர்வதித்து ஏகுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திரு. திருமதி. விஸ்வலிங்கம்**
புகையிரதவீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

**திரு. திருமதி. பாலசிங்கம்**
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

வரவேற்பாளர்கள்

**Mr. & Mrs. Thathiwasakandan,**
280, Wellesley St. East, 1014
Toronto, Ont. Mir 5A1,
Tel; (416) 962-7832.

**Mr. & Mrs. Balasingam,**
111 Clermont, Laval Des Rapides
Montreal, Que. H7N 2Z6
(514) 686-9777


### உலக தரிசன இயக்க உதவி

நெடுந்தீவு, ஏப் 18

விதவைகள், அங்கவீனர்கள் வன்செயலால் உடைமைகளை இழந்தோர், வீடுகள் பாதிப்புற்றோர், தொழில் இழந்தோர் ஆகியோருக்கான நிவாரண உதவிகளைவழங்க உலக தரிசன இயக்கத்தின் அவுஸ்ரேலிய பிரிவு ஆர்வம் கொண்டுள்ளதாக இப்பிரிவின் வட பகுதித் திட்டப் பொறுப்பாளர் திரு. பென் குணரத்தினம் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து ஆராயவென ஆஸ்திரேலிய தூதரக உயர் அதிகாரி திரு. கோடன் கேபார்டின் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார் எனவும் அறியப்படுகிறது. (ப- 111)

### பத்தாயிரம் --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து 1, 100 பேரும், திருகோணமலையிலிருந்து 1, 500 பேரும் ஆக மொத்தம் 4ஆயிரம் பேர் மட்டுமே நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.

இதே வேளை—

'றிசேர்வ்' பொலீஸ் பதவிக்கு விண்ணப்பிக்காதவர்களும், விண்ணப்பித்தும்,நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படாதவர்களும் பின்வரும் ஆவணங்களுடன் தத்தமது மாவட்டங்களில் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகங்களில் நடக்கும் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1. கல்வித் தகைமைச் சான்றிதழ்
2. விளையாட்டுத் துறைச் சான்றிதழ்
3. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்
4. கிராமசேவை உத்தியோகத்தரின் நற்சான்றிதழ்
5. திறமை பற்றிய சான்றிதழ்
6. தேசிய அடையாள அட்டை
7. கிராமசேவையாளர் வதிவிடச் சான்றிதழ்

இவ்வாறு உள்ளே வாருங்கள் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் அளிப்பவர்களுக்கு, விண்ணப்பப் படிவம் அங்கேயே வைத்து வழங்கப் படும் என்றும்-

அங்கு வைத்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கும் பட்சத்தில் நேர்முகப் பரீட்சை உடனடியாக நடத்தப்படும் என்றும்அறிய வருகிறது.

றிசேர்வ் பொலீஸ் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை வியாழக் கிழமை வவுனியா, யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் சனிக்கிழமை திருகோணமலையிலும் நடைபெறும். உடனடி விண்ணப்பம் செய்வோர் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் நேர்முகப் பரீட்சை மேலும் இரண்டொரு தினங்களுக்கு நீடிக்கப்படும், என்றும் தெரிவிக்கப்பட்டது.

றிசேர்வ் பொலீஸ் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பிப்போர் ஆகக் குறைந்தது ஜீ. சீ. ஈ.சாதாரண தரம் சித்தி எய்தியிருக்கவேண்டும் என்றும் நெஞ்சு அகலம் 32 அங்குலமாக இருக்க வேண்டும் என்றும் முன்னர் கேட்கப்பட்டிருந்தது. [அ-9]

### அரசாங்கம்- - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேசமாக இருக்க விரும்புகிறது.

**அனுமதிப்பதன் அர்த்தம்**

இதை முன்னிட்டே, அதாவது திருத்தத்துக்கு முரணாக ஈழப்பிரகடனம் செய்த ஈ. பி. ஆர். எல். எவ். தொடர்ந்து மாகாணசபையை நடத்த அனுமதிப்பதற்கு அரசு முயல்கிறது.

இந்தியாவின் வளர்ப்புப் பிள்ளைகளான ஈ. பி. ஆர். எல். எவ்விற்கு இவ்வசதியைச் செய்துகொடுப்பது புண்பட்ட இந்திய மனநிலைக்கு ஒத்தடம் கொடுப்பதாகவும் அமையும் என இலங்கை அரசு கருதுகிறது - என்றார். (உ-2)

### கொழும்பு. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி ஐந்து தாய்லாந்து பெண்களில் மூவரிடம் பாஸ்போர்ட் இல்லை என்றும்—

மற்றைய இருவரின் விஸாக்களும் காலாவதியாகிவிட்டன என்றும்—

இந்த ஐவரும் விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வந்ததாக [illegible] பொலீஸ் [illegible] தெரிவித்தனர். (உ)

ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ்

# போக்குவரத்துச்சபை ஊழியர் ஓய்வு பெறும் கால எல்லை நீடிப்பு

கொழும்பு ஏப் 18

ஊக்குவிப்பு ஓய்வுத் திட்டத்தின் கீழ் ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கான விண்ணப்ப முடிவு திகதியை இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை நீடித்துள்ளது

கடந்த மார்ச் மாத இறுதி வரை இத்திட்டத்தின் கீழ் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டது.

இப்போது அது நீடிக்கப் பட்டுள்ளது.

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையில் தற்போது 52 ஆயிரம் பேர் பணி புரிகின்றனர்.

ஊக்குவிப்பு ஓய்வுத் திட்டத்தின் கீழ் சுமார் 15,000 முதல் 20 ஆயிரம் ஊழியர் வரை ஓய்வு பெற விண்ணப்பிப்பர் என்று அரசு எதிர் பார்த்தது.

ஆனால் மார்ச் இறுதி வரை ஆக 5 ஆயிரத்து 600 பேர் மட்டுமே ஓய்வு பெற விண்ணப்பித்திருந்தனர்.

மேலதிக ஊழியர் ஓய்வு பெற இன்னுமொரு சந்தர்ப்பம் வழங்கும்படி அமைச்சர் விஜேபால மென்டிஸ் உத்தரவிட்டிருக்கிறார்.

ஊக்குவிப்பு ஓய்வுத் திட்டத்தின் கீழ் 5 வருட கால சேவையுடன் ஓய்வு பெறும் ஊழியருக்கு 6 மாத சம்பளம் அல்லது ஆகக் கூடியது 12 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு பணமாக வழங்கப்படும்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்த ஊழியருக்கு 7 முதல் 22 மாத கால சம்பளம் அல்லது ஆகக் கூடியது ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு பணமாக வழங்கப்படும்.

இவற்றை விட வழமையான நலன் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (இ-எ)

### எழுதுவினைஞர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 18

அரச எழுதுவினைஞர் சங்கத்தின் 29 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் மே மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

கடந்த 11 வருடங்களாக இச்சங்கம் செயலற்றிருந்தது. அரசினால் தொழிற்சங்கங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதன் காரணமாககுறிப்பிட்ட திகதியில் நடைபெறவுள்ள இக் கூட்டத்துக்கு வருகை தந்து ஒத்துழைப்பு நல்குமாறு சங்கப் பொதுச்செயலாளர் திரு. செ. பரராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுக்கூட்டம் நடைபெறும் இடம்,நேரம் பற்றிய மேலதிக விவரங்கள் அறிவிக்கப்படவுள்ளன. [இ-ப]

### மின்சாரம் இடை நிறுத்தம்

கோப்பாய், ஏப் 18

கோப்பாய் உப அபிவிருத்தி சபைக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோத மின் பாவனையைகட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இரவு வேளைகளில் மணித்தியாலத்துக்கு 15 நிமிடம் வரை மின்சாரம் இடை நிறுத்தப் படுகிறது. (இ-72)

### விபுலானந்தர் இல்லம் முதலிடம்

தாளையடி,ஏப் 18

மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய் வல்லுநர் போட்டியில் விபுலானந்தர் இல்லம் முதலிடம் பெற்றது.

இரண்டாவது இடத்தை நாவலர் இல்லம் மூன்றாவது இடத்தை ஞானப்பிரகாசர் இல்லமும் பெற்றன். (க-144)

### நீல இல்லம் முதலிடம்

கோப்பாய், ஏப். 18

கோப்பாய் நாவலர் பாடசாலையின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் நீல இல்லம் முதலிடத்தை பெற்று இரண்டாம் மூன்றாம் இடங்களை சிவப்பு, பச்சை இல்லங்கள் பெற்றுக் கொண்டன. (க-72)

### மினிபஸ். . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரத்துச் சங்கம்,யாழ் மாநகர சபையிடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் விடுத்துள்ளது.

இந்தியப்படை நிலைகொண்டிருந்த சமயம் யாழ் மாநகர சபை, சகல மினி பஸ்களையும், சேவைநேரம் வரும்வரை யாழ் சிங்கள மகாவித்தியாலயம் அமைந்திருந்த மைதானத்தில் தரிக்க உத்தரவிட்டிருந்தது என்பது தெரிந்ததே. (ஓ-9)

### இம்மாத - - -

[1ஆம் பக்கத்தொடர்ச்சி]

தெரிவித்தார்.

அனேகமாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ எதிர்வரும் 25 ஆம் திகதியளவில் யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. (உ)

### வீட்டுப் பணிப் பெண்களுக்கு 100 அமெ. டாலர் சம்பளம்

கொழும்பு, ஏப்ரல் 18

வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகப் பணிபுரியச் செல்பவர்களுக்கு ஆகக் குறைந்தது நூறு அமெரிக்க டாலர் சம்பளமாக வழங்கவேண்டும்,

இப்படி அரசு சகல வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கும் ஏஜன்ஸிகளையும் பணித்துள்ளது. (ஓ-எ)


## வேலை வாய்ப்பு

இரு வருட ஒப்பந்தத்துடன் இருமாதங்களில் Work Permit உடன் Oneway Ticket தொழில் வாய்ப்புப் பெற வெற்றிடங்கள் உண்டு. விரைவில் நாடுங்கள்.

**புறூணை:** Building Construction Labourers
சாப்பாடு இல்லாமல் ஏனைய சகல வசதிகளுடனும்
சம்பளம் ரூபா 10,000

**சிங்கப்பூர்:** House Maids
சகல வசதிகளுடனும்
சம்பளம் 3000 — 4000 வரை.

**All Countries P. P. 6. P. P. Size Photo தேவை.**

பாஸ்போட் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**Satheesan Travels & Tours**
K. K. S. Road,
Mallakam Junction,
Mallakam.
(3312)



## அந்தியேட்டி அழைப்பிதழ்

வேலணை கிழக்கு

### ஸ்ரீமதி கந்தையா பொன்னம்மா

21-03-90 புதன்கிழமை சிவபதம் அடைந்த வேலணை கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீமதி கந்தையா பொன்னம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 19-04-90 வியாழக்கிழமை காலை 7 மணியளவில் வேலணை வெள்ளைக் கடற்கரையிலும் வீட்டுக்கிரியை 20-04-90 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்:

இவ் வைபவங்களில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

வேலணை கிழக்கு
வேலணை - 1

குடும்பத்தினர்
(12335)



## பதவி வெற்றிடம்

1. பதவி : கணக்காளர்.
2. கல்வித்தகமை: பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பரீட்சையில் சித்தி அல்லது ஐ சி.எம்.ஏ (ICMA) பகுதி I அல்லது தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்கியல் டிப்ளோமா அல்லது இவற்றுக்குச் சமமாக உயர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3. வயது : 25 தொடக்கம் 50 வரை.
4. சம்பளம்: ரூபா 1755 — 2805(விசேடபடிகள்தவிர்ந்த)

75X6 — 100X6

அனுபவம் : அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் மூன்று வருடத்துக்கு மேல்விரும்பத்தக்கது.

இப் பதவிக்கான விண்ணப்பங்கள் 1990 ஆம் ஆண்டு வைகாசி மாதம் (May) 15 ம் திகதிக்கு முன்னர் கீழ்த்தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிக்கான பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

முகவரி :

வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
தபால் பெட்டி இலக்கம் :41,
யாழ்ப்பாணம்.
(3316)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள்,
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
புத்தாண்டுப் பரிசாக (போனஸ்)
விசேட கழிவுகள் வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:
**ஆர்த்தி ஜுவலல்ஸ்**
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,

# உதயன்

18 - 04 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
**மாருதி ஜுவல்ஸ்**
* தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
* விநியோகம் ஒரு வாரம் [7 Days]
* விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

கிளிநொச்சியில்

## அன்னை பூபதி நினைவாக மாபெரும் எழுச்சி விழா

கிளிநொச்சி, ஏப் 18
தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கலை கலாச்சார அவையின் கிளிநொச்சி பிரிவினரால் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கடந்த 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் கிளிநொச்சி மருதடி மைதானத்தில் மாபெரும் எழுச்சிவிழா நடைபெற்றது.

இந்த விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சிமாவட்ட விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் திரு. கோபி சிறப்புரை ஆற்றினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் போது வன்னி மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன் சிறப்புரை ஆற்றினார்.

இறுதி நாள் நிகழ்ச்சிகள் மிகவும் பிரமாண்டமான அளவில் நடைபெற்றது. பரந்தன் சந்தியில்இருந்து ஆரம்பமான எழுச்சி ஊர்திப் பவனியில் ஏராளமான ஊர்திகள் பங்குபற்றின. இதில் முன்னர் சில குழுக்களினால் நடத்தப்பட்ட கட்டாய இளைஞர்இராணுவ பயிற்சிக்காக பிடிக்கப்பட்ட நிகழ்ச்சி நடித்துக்காட்டியதை வீதியில் நின்ற மக்கள் ரசித்தார்கள்.

மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டார்கள். இதனை ஒட்டி கிளிநொச்சி நகரம் எங்கும் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது

மூன்று நாட்களும் விவாத அரங்கம், பட்டிமன்றம், நாடகங்கள், பரதநாட்டியம், நாட்டுக்கூத்து, இசை அரங்கம்ஆகியன நடைபெற்றன. (க-76)

ஷப்றா ஆதரவுடன் நடக்கும்

## தேவார மனனப் போட்டி இன்று காலை ஆரம்பம்

### 21, 22 ஆம் திகதிகளிலும் நடக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 18
ஷப்றா நிதி நிறுவன ஆதரவுடன், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நடத்தும் தேவார மனனப்போட்டி இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது.

தேவாரம் பாடும் பழக்கத்தை இளம் சமுதாயத்தினரிடையே வளர்க்கும் நோக்கத்துடன் இந்த மனனப் போட்டி எற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியின் முதல் நாள் இன்றாகும்.
இன்று காலை ஒன்பது மணிக்குத் தேவார மனனப்போட்டி நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

அதன் பின்னர் 21 ஆம் திகதி சனிக்கிழமையும், 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மனனப் போட்டிகள் நடக்கும் போட்டியாளர்கள் எந்தத் திகதியில் நடக்கும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற விவரம் விண்ணப்பதாரர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்களும் மனனப் போட்டி நடந்து முடிந்த பின்னர், பரிசளிப்பு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெறும், (அ)

## ரயிலில் தாவி ஏற முயன்றவர் கீழே விழுந்து மரணம்!

### குருநாகலில் சம்பவம்

யாழ்ப்பாணம் ஏப் 18
கொழும்பில் இருந்து பரந்தனுக்கு ரயிலில் இருசிறுவர்களுடன் வந்தவர் ரயில் புறப்பட்ட பின் தாவி ஏற முயற்சிக்கையில் தவறி விழுந்து மரணமானார். அவருடன் வந்த இருசிறுவர்களும் தனியாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.
கடந்த புதன் கிழமை நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-
கொழும்பில் தொழில்புரியும் பி. கார்மேகம் என்பவர் புதுவருட கொண்டாட்டத்துக்காக பரந்தனுக்கு வந்த போது தம்முடன் தமது மருமக்களான சந்திரகுமார் [9 வயது] ரமேஸ்குமார் [7 வயது] என்ற இருசிறுவர்களையும் கூட்டிவந்தார்.
குருநாகல் ரயில் நிலையத்தில் ரயில் நின்ற சமயம் தண்ணீர் எடுப்பதற்காக ரயிலை விட்டு இறங்கியவர் ரயில் புறப்பட்ட பின்னர் தாவி ஏற முயன்றார். அச்சமயம் தவறிக் கீழே விழுந்து மரணமானார்.

ஆனால் அவர் உயிரிழந்த தகவல் ரயிலில் இருந்த அவரது மருமக்கள்மார்களுக்குத் தெரியவில்லை.

இருசிறுவர்களும் தனியாக் யாழ். ரயில் நிலையத்துக்கு வந்துசேர்ந்தனர். அவர்களை ரயில் நிலைய அதிகாரிகள் பாதுகாப்பில் வைத்திருந்தனர்.

பின்னர் சிறுவர்களின் பெற்றோருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. அவர்கள் நேற்று இங்கு வந்து சிறுவர்களைக் கூட்டிச்சென்றனர். [உ-3]

## யாழ் பாடசாலைகளில் மாதாந்த பரீட்சைகள்

யாழ்ப்பாணம் ஏப் 18
யாழ் - மாவட்டப் பாடசாலைகளில் மாதாந்தப் பரீட்சைகள் நடாத்த வேண்டும். அத்துடன் அந்த பரீட்சை விடைத்தாள்கள் மாற்று ஏற்பாட்டின் கீழ் வேறு பாடசாலையில் திருத்தப்படவேண்டும்.

இப்படி அறிவித்துள்ளார் யாழ் - மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம்.

சகல பாடசாலைகளுக்கும் இது சம்பந்தமான சுற்று நிருபம் அனுப்பவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இரண்டாம் தவணை முதல் ''ஏ'', ''பி'' தர பாடசாலைகள் இரு நேரமாக இயங்க வேண்டும் என்று அவர் அறிவித்துள்ளார்.

பரீட்சை நடாத்திய விவரங்கள், ஆசிரியர்கள் வரவுகள் சரியான முறையில் பாடசாலைகளில் பேணப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## ஆளுநர் நளின் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
வட - கிழக்கு மாகாணசபை ஆளுநர் திரு. நளின் செனவிரத்னா இவ்வார இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.
இங்கு மேற்கொள்ளப்படும் புனரமைப்பு, நிவாரண வேலைகள் பற்றி இவர் இங்கு அரச அதிகாரிகளுடன் ஆராயவிருக்கிறார். (ஒ-3)

## பாம்பு தீண்டி சிறுவன் பலி!

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 18
ஈச்சம்பழம் பிடுங்கச்சென்ற சிறுவன் பாம்பு கடித்ததனால் பலியான சம்பவம் நேற்று முன்தினம் எழுதுமட்டுவாளில் இடம் பெற்றது.
கிளிநொச்சியைச் சேர்ந்த குமார் (வயது 12) என்னும் சிறுவனே பலியானவராவார். [ஒ-117]

## ஹெரோயின் கடத்திய பெண்!

கொழும்பு ஏப் 18
தலை முடியினுள் 19 பக்கட் ஹெரோயின் போதை வஸ்தை மறைத்துச் கடத்திச் சென்ற ஒரு பெண்ணை கந்தானைப் பொலீஸார் கைது செய்தனர். (உ-எ)

**செய்திச் சாரம்**

## காங்கேசன் ரயில்பாதை புனரமைப்பு

கொழும்பு, ஏப்ரல் 17
கனேடிய அரசு வழங்கும் 20 லட்சம் ரூபா நிதி உதவியைக் கொண்டு யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை ரயில் பாதையை திருத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது. (ஓ:எ)

## கொழும்பில் 15 பேர் விபத்தில் பலி!

கொழும்பு, ஏப்ரல் 18
கடந்த மார்ச் மாதத்தில் கொழும்பு மாநாசரில் மட்டும் பதினைந்து பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.
இவர்களில் எட்டுப் பேர் பாதசாரிகள், மூவர் வாகனங்களில் பயணஞ் செய்தவர்கள்.
இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் ஆவர். எஞ்கிய இரண்டு பேர் சைக்கிள் ஓட்டிகள் ஆவர். [உ-எ]

## ரூ. 45 கோடி விரயம் சேமிக்கப்பட்டது

கொழும்பு, ஏப்ரல் 18
விரயங்களை ஒழிக்கும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட ஓராண்டில் அரசு செலவினத்தில் சுமார் 45 கோடி ரூபா சேமிக்கப்பட்டிருப்பதாக அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்த இயக்கம் கடந்த ஆண்டு பெப்ரவரியில் ஜனாதிபதி பிரேமதாஸாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. [உ-எ]

## ராணுவ உதவி

டாக்டர் நஜிப் தலைமையிலான காபூல் அரசுக்கு வழங்கப்பட்டு வரும் இராணுவ உதவிகளை சோவியத் அரசு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.
காபூலில் வெளிநாட்டு அமைச்சராக பணிபுரிந்தவர், நஜீப்பைக் கவிழ்க்க மேற்கொண்ட சதிமுயற்சி தோல்வியில் முடிவடைந்தது தெரிந்ததே.
அதன் பின்னர்தான் சோவியத் அரசு தனது இராணுவ உதவியை அதிகரித்திருப்பதாக மேற்குலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடக்கின் சிறந்த கிரிக்கெட் அணி; யாழ்ப்பாணம் இந்து நிரூபித்தது!

### சென். ஜோன்ஸுடனும் இன்னிங்ஸ் வெற்றி!!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
நேற்று யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு எதிரான கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸால் வெற்றியீட்டியது.

இதன் மூலம் வடக்கின் மிகச் சிறந்த பாடசாலை கிரிக்கெட் அணி என்பதை யாழ். இந்து கிரிக்கெட் குழு சர்ச்சைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நிரூபித்துக்கொண்டது.

இந்த கிரிக்கெட் பருவ காலத்தில் எட்டு ஆட்டங்களில் கலந்துகொண்ட யாழ். இந்து அணி - சென். ஜோன்ஸ், கொக்குவில் இந்து, மகாஜனா, பளிப்பாய் இந்து, ஹாட்லி, ஸ்கந்தா ஆகிய ஐந்து பாடசாலை அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வென்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி, மத்திய கல்லூரி அணிகளை விக்கெட்டுகளினால் தோற்கடித்தது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டம், நேரம் போதாமையால் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இந்த ஆட்டத்திலும் இந்து அணியே முன்னணி வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சென். ஜோன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்து அணி நேற்று முன்தினம் - முதல் நாள் - ஆட்ட நேர முடிவின்போது 9 விக்கெட் இழப்பிற்கு 286 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதல் இன்னிங்ஸை முடித்துக் கொண்டது.

கோபிராஜ் 73, ராஜசேகர் 46, கபிலன் 43, ஆர். வரதன் 40, நரேந்திரன் 24, வரதன் 20, ஜெயராஜ் 17 ஓட்டங்களை பெற்றிருந்தனர். பிரசாந்தன் 3 விக்கெட்டுகளையும், சதீசன் 3 விக்கெட்டுகளையும், அஜித் லக்ஸ்மன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

நேற்று தனது முதல் இன்னிங்ஸை ஆடத் தொடங்கிய சென்ஜோன்ஸ் தொடர்ந்து விரைவாக விக்கெட்டுகளை இழந்து 75 ஓட்டங்களை மட்டுமே பெற்று ஆட்டமிழந்தது.

ஜெகேந்திரன் 19 விபீஷ்ணா 14, சுரேன்குமார் 10 ஓட்டங்களை பெற்றனர். நரேந்திரன் 4 விக்கெட்டுகளைம், வரதன், பிரபாகரன் இருவரும் தலா 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸையும் ஆடப் பணிக்கப்பட்ட சென்ஜோன்ஸ் கல்லூரி மீண்டும் 85 ஓட்டங்களை மட்டுமே பெற்று ஆட்டமிழந்தது.

ஜெகேந்திரன் 27, சுரேன் குமார். பிரசாந்தன், சதீசன் மூவரும் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பிரபாகரன் 6 விக்கெட்டுகளையும், நரேந்திரன் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இரண்டாம் நாள் மதிய போசனத்துக்கு முன்னரே ஆட்டம் முடிவுற்றது. [இ-உ-மு]

## தீ விபத்து

பச்சிலைப்பள்ளி; ஏப் 18
பட்டாஸ் கொளுத்திய போது ஏற்பட்ட தீ விபத்தில் வீடு ஒன்றும் வைக்கோல் குவியல் ஒன்றும்எரிந்தன.

இச் சம்பவம் அண்மையில் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது. (ப-117)

பல்கலைக்கழகங்களில்

## அனுமதி பெறாத மாணவருக்கு உயர் கல்வி: 21 இல் மாநாடு

யாழ்ப்பாணம், ஏப் 18
பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற தகுதி பெற்றும், அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கும்திட்டம்பற்றிஆராய்வதற்கானமுதற்கூட்டம்எதிர் வரும் 21 ஆம் திகதி பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

பிராந்திய கல்லூரிகள், திறந்த பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் இந்த மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பை அளிக்கும் வகையில் புதிய திட்டம் தயாரிக்கப்படும். இந்தத் திட்டத்தை வருட இறுதிக்குள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

மருத்துவம், சமூகவியல், விஞ்ஞானம், வர்த்தகம், முகாமைத்துவம், கணிதவியல், விஞ்ஞானம், விவசாயமும் — மிருகவைத்தியமும், பொறியியல் ஆகிய ஏழுதுறைகளில் உயர்கல்வி வசதி அளிக்கப்படவிருக்கின்றது.

நாட்டில் உள்ள எட்டு பல்கலைக்கழகங்களின் கல்விமான்களும், திறந்த பல்கலைக்கழக பேராசிரியர்களும், அரசு சார்பற்ற நிறுவன ஆலோசகர்களும் இந்த ஒவ்வொரு துறைகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள்அனைவரும் ஒன்று கூடி பாடத்திட்டங்கள், வகுப்பு வசதிகள், பாடவிதானம், பட்டம் வழங்கும் முறைகள் ஆகியனபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

எதிர் வரும் 21 ஆம் திகதி நடைபெறும் ஆரம்ப கூட்டத்துடன் இந்தக்குழுக்களும் இயங்க ஆரம்பிக்கும். (உ-3)

## ஜனாதிபதி விருது! திறமையான அதிபர்களுக்கு

கொழும்பு, ஏப் 18
திறமை வாய்ந்த பாடசாலை அதிபர்களுக்கு அடுத்த ஆண்டு முதல் ஜனாதிபதி விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.
மாகாண கல்வி அமைச்சர்கள் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக திறமையான பாடசாலை அதிபர்கள் தெரிவு செய்யப்படுவர்.
மாணவரின் பரீட்சை பெறுபேறுகள், மாணவர் வரவு, பாடசாலை வளர்ச்சி நடவடிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் திறமையான அதிபர்கள் தெரிவுசெய்யப்படுவர் என்று அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார். (உ-எ)

## கொழும்பில் பலத்த காற்று; கட்டடம் இடிந்து டாக்டர் பலி!

கொழும்பு, ஏப்ரல் 18
கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை பெருமழையுடன் கூடிய ''பேய்க் காற்று'' வீசியது.
இதனால் பாபர் வீதியில் டிஸ்பென்சரி கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது. அதில் சிக்குண்டு அங்கு பணிபுரிந்த டாக்டர் பிள்ளை சுந்தரம்பிள்ளை என்ற டாக்டர் உயிரிழந்தார்.
நேற்று முன்தினம் மாலை 3 மணி முதல் 6.30 மணி வரை பெரும் காற்று வீசியது.
காற்றினால் பல மரங்கள் ஆங்காங்கே முறிந்து வீழ்ந்ததில் பல கட்டடங்கள், வீடுகள் சேதமுற்றன.
தொலைபேசி மற்றும் மின் கம்பிகள் அறுந்து வீழ்ந்ததால் தொலைபேசி மற்றும் மின் விநியோக சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. (உ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. வேலுப்பிள்ளை அன்னதேவன்
(லொறிச்சாரதி)

சுன்னாகம் சூளானையைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை அன்னதேவன் (லொறிச்சாரதி) அவர்கள் சவுதி அரேபியாவில் அகால மரணமடைந்தார் என்ற செய்தியை மிகுந்த துயரத்துடன் உங்களுக்கு அறியத் தருகின்றோம்.

அன்னார் சுன்னாகம் சூளானையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - பூரணம் அவர்களின் ஏக புத்திரனும், ஜீவராணியின் அன்புக்கணவரும், ராஜ்பாபு, ராஜ்குமார், ராஜ்கபூர், துஷ்யந்தி, அசோக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, இராசமலர், இராசநாயகி, அன்னராணி, இந்திராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்ற கந்தையா, நகேந்திரன் (C. G. R.) சிவலிங்கம், சாலஞ்சென்ற கந்தையா, சுரேஷ்குமார்(ஜேர்மனி) ஆகியோரின் அருமை மைத்துனரும். செல்வரஞ்சன் (சவுதி), ஜெயகாந்தன் (சவுதி) சந்திரபாலன் (ஜேர்மனி), செந்தூர்ச்செல்வன் (சிங்கப்பூர்), கௌரிபாலன் ஜெயவாணி, கதிர்காமநாதன் (ஜேர்மனி), கமலாம்பிகை, பானுரேகா, சர்மினி, துஷ்யந்தன், விஜயந்தன், பிரதீப், மயூரதன் பிரசன்னா, ஜீவிதா, நிசாந்தன், ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர்கள் இவ் அறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மைத்துனர் சிவலிங்கமும், குடும்பத்தினரும்.**

சூளானை,
சுன்னாகம். (3314)

### திரு பொன்னுத்துரை இராசரத்தினம்

கொக்குவில் மேற்கு சொர்ணவடலியை பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை இராசரத்தினம் காலமாகிவிட்டார். அன்னார் கொக்குவில் மேற்கு தம்பித்துரையின் அன்பு மகள் சிரோன்மணியின் அன்புக் கணவரும், பொன்னுத்துரை இராசம்மா அவர்களின் அன்பு மகனும், இராசமலர் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் நவரத்தினம், கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும். பிரேமலதா, சந்திரலதா, தயாகரன், சுதாகரன், சுகிர்தகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார், (நகைமாளிகை) ஆனந்தகுமார் (கணக்காளர் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவநீதகிருஷ்ணன் (செயலாளர் மனோகரன் அன் வெற்றிவேல்) யோகேஸ்வரன் (கணக்காளர் றஸ்ரம்ஜி கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரூபவதி, சறோஜினிதேவி ஆகியோரின் சகோதரரும். அருள்ராஜ், கோபிராஜ், துஷ்யந்தன் ஆகியோரின் பேரனும். சசிரேகா, மோகனமுரளிதரன், சுமதி, தேவதாசன், உஷா, செல்வி, ஆகியோரின் மாமனாருமாவர்.

அன்னாரின் பூதவுடல் ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக புதன்கிழமை (18-04-90) முற்பகல் 10.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, மக்கள், மைத்துனர்மார்கள்.**

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு. (12332)

### திருமதி ஏகாம்பரம் தங்கம்மா

திருமதி ஏகாம்பரம் தங்கம்மா சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் திரு. கந்தையா ஏகாம்பரம் அவர்களின் அருமை மனைவியும், திருவாளர்கள் பொ. சபாரத்தினம் (ஓய்வுபெற்ற கலால் உத்தியோகத்தர், இ. போ. ச. சாரதி), காலஞ்சென்ற பொ. தம்பிப்பிள்ளை (கலால் உத்தியோகத்தர்), பொ. இராசலிங்கம் (பரஸ்கோ உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருவாளர்கள் சண்முகசுந்தரம் (சவூதி அரேபியா), சண்முகராஜா (பிரான்ஸ்), சண்முகரத்தினம், சண்முகலிங்கம், புனிதசீலி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. மு. பரமேஸ்வரன் (அதிபர், யா/ செங்குந்த இந்துக் கல்லூரி), திருமதிகள் மதிவதனா, மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், சுஜாதா, லாவண்ஜா (யா / இந்து மகளிர் கல்லூரி), சரவணப்பிரியன், லவன், குயீலினா, ரமணா (பிரான்ஸ்), லதா, பிரதீப், பிரசாத் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 35, செங்குந்தா வீதி, திருநெல்வேலி இல்லத்தில் 19-04-1990 வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3-30 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மக்கள், மருமக்கள்**

35, செங்குந்த இந்துக் கல்லூரி வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். [12932]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org